செ. கு. எண்: 243 நாள் : 10.09.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 10.9.2013

கிருஷ்ணகிரி மாவட்டம், கக்கன்புரம் கிராமம், ஒசூர் - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் 16.7.2013 அன்று அரசுப் பேருந்து பழுதடைந்து நின்றதன் காரணமாக பழுது பார்க்கும் பணியினை மேற்கொண்டிருந்த திருவண்ணாமலை மாவட்டம், வேடத்தவாடி கிராமத்தைச் சேர்ந்த அந்தப் பேருந்தின் நடத்துனர், திரு. முருகன் என்பவர் மீது அந்த வழியே வந்த வாகனம் மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வனக்கோட்டத்தில் வனக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. காசி என்பவர் 6.8.2013 அன்று எடுத்தவாய்நத்தம் கிராமத்தில் புகுந்த காட்டு யானைகளை விரட்டும் பணியில் ஈடுபட்டிருந்த போது கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், பரளியார் செக்போஸ்ட் அருகே 13.8.2013 அன்று பேருந்தை ஓட்டிக் கொண்டிருந்த ஓட்டுநர் திரு. ராமசாமிக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டதால், அப்பேருந்து நிலை தடுமாறி பாறையின் மோதி கவிழ்ந்ததில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகே 13.8.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் நான்கு நபர்கள் பலத்த காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும்; கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9